# ஆழ்வார்கள்




கிருஷ்ணாவதாரம் கலியுகம் தொடங்கும் போது, உலகம் இருளில் மூழ்க தொடங்கி வேதங்களின் உண்மையான சாரம் மறைய தொடங்கியது. வேத வியாசர் இயற்றிய "ஸ்ரீமத் பாகவதத்தை" கொள்ளவும், வேதங்களின் சாரத்தையும், அந்த பகவானின் பெருமையை , மறுபடியும் பரப்பவும் பாகவதர்களான " பன்னிரு ஆழ்வார்கள் " திரு அவதாரம் செய்தனர்.

இவர்களது திரு அவதாரம் ஸ்ரீமத் பாகவதம் மற்றும் நாரதீய புராணத்திலும் கணிக்க பட்டு உள்ளது.

kṛtādiṣu prajā rājan
kalāv icchanti sambhavam
kalau khalu bhaviṣyanti
nārāyaṇa-parāyaṇāḥ
kvacit kvacin mahā-rāja
draviḍeṣu ca bhūriśaḥ
tāmraparṇī nadī yatra
kṛtamālā payasvinī
kāverī ca mahā-puṇyā
pratīcī ca mahā-nadī
ye pibanti jalaḿ tāsāḿ
manujā manujeśvara
prāyo bhaktā bhagavati
vāsudeve 'malāśayāḥ

---- பாகவதம் [11.5.38 - 40]

அங்கிர முனிவர் கூறுகிறார் - கலி யுகத்தில் விஷ்ணுவின் தூய பக்தர் பலர் ஆவதரிப்தால் சத்திய யுகம் மற்றும் வேறு யுகங்களில் இருந்தவர்கள் கலி யுகத்தில் ஆவதரிக்க ஆசை படுவார்கள். இந்த தூய விஷ்ணு பக்தர்கள் பலர் திராவிட தேசத்தில் அவதரித்து அந்த பகவானின் நாமத்தை தங்கள் பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்வார்கள்.

<u>ஆழ்வார்கள் யார்?</u>

ஆழ்வார் என்றால் "ஆழ்ந்து இருப்பவர்" என்று பொருள். எப்போதும் பகவத் சிந்தனையில் ஆழ்ந்து மற்றவர்களையும் ஆழ்த்துபவர்கள் ஆழ்வார்கள். இந்த ஆழ்வார்கள் ஆவதரித்தத்தின் காரணமே நம் போன்ற ஜீ வாத்மாக்களை

பரமாத்மாவை நோக்கி அழைத்து செல்வதற்கே!

இவர்கள் பூலோகத்தில் எல்லா வித மனிதர்கள் மத்தியிலும் ஜாதி மத பாகுபாடு இன்றி, ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் அவதரித்து பகவானின் நாமம்களை வாயார இனிமையான தமிழ் பாடல்களாக பாடி கொடுத்து, எல்லோரையும் பக்தில் மூழ்க வைத்தனர்.

இவர்கள் பாடிய 4000 திவ்ய பிரபந்தம் திராவிட(தமிழ்) வேதம் என்று கருதபடுகிறது. இந்த பாசுரங்கள் பக்தர்களின் மனத்தையும், பகவானிடம் சரணாகதி அடைவதன் முக்கியத்துவதையும் பற்றியும், வேதத்தி சாரத்தையும் கொஞ்சும் எளிய தமிழில் எல்லோரும் அனுபவிக்கும் வகையில் அமைந்து உள்ளது.

ஆழ்வார்கள் நிரம்ப சக்தி படைத்தவர்கள் ஆனால் மனிதர்கள். இவர்கள் பகவான் மஹா விஷ்ணுவின் வைகுண்ட வாசிக ளான சங்கம் ,சக்கரம், கதம், கட்கம், வனமாலை போன்ற நித்திய சூரிகளின் ஆவதரமே.

1. பொய்கை ஆழ்வார் - இவர் பகவானின் பாஞ்சஜ யத்தின் (சங்கு) அம்சம்.

2. பூதத்தாழ்வர் - இவர் பகவானின் கௌமோதகியின் (கதை) அம்சம்.

3. பேயாழ்வார் - இவர் பகவானின் நாதங்கம் (வாள்) அம்சம்.

4. திருமழிசை ஆழ்வார் - இவர் பகவானின் சுதர்சன சக்கரத்தின் அம்சம்.

5 மதுரகவி ஆழ்வார் - இவர் பகவானின் வினதேய (தெய்வீ கபறவை) அம்சம்.

6. நம்மாழ்வார் - இவர் பகவானின் சேணைத்தலைவர் விஷ்வக்சேனர் அம்சம்.

7. குலசேகர ஆழ்வார் - இவர் பகவானின் கௌஸ் ப இரத்தின மாலையின் அம்சம்.

8. பெரியாழ்வார் (விஷ்ணுசித்தர்) - இவர் பகவானின் கருட வாஹனத்தின் அம்சம்.

9 ஆண்டாள் (கோதா தேவி) - இவர் பகவானின் துணைவியான பூதேவியின் திரு அவதாரம் ஆவார்.

10. தொண்டர்அடிபொடி ஆழ்வார் - இவர் பகவானின் வனமாலையின் அம்சம். ஆவார்.

11. திருப்பா ணாழ்வார் - இவர் பகவானின் வத்ஸ முத்திரையின் அம்சம் ஆவார்.

12. திருமங்கை ஆழ்வார் - இவர் பகவானின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சம் ஆவார்.

**அழ்வார்கள் திருவடிகளே சரணம்!**